www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

27 FEBRUARY 2023 - MONDAY | Pages - 09 | E Paper - # 030 / Y 01 / 2023

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk





### பதவி விலக தினேஷ் மறுப்பு:

# பிசுபிசுத்துப்போன மஹிந்தவின் கனவு

## மொட்டுக் கட்சிக்குள் மேலும் பிளவு

பிரதமர் தினேஷ் குணவர்தனவை அப் பதவியிலிருந்து அகற்றி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக நியமிப்பதற்கு பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சிலர் மேற்கொண்ட முயற்சி இப்போது பிசிபிசித்துப் போயுள்ளது. 02 »»»

# பிரதமரிடம் கையளிக்கப்படும் எல்லை நிர்ணய அறிக்கை

உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணய குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை செவ்வாய்க்கிழமை (28) பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்படவுள்ளதாக எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். 04 »»»

# என்னை இனங்காண முடியாத பயங்கர நோயில் மனைவி அவதி

### இப்படியிருக்கும் எனக்கு தூற்றுகிறார்கள்

## புலம்புகிறார் சரத் வீரசேகர



எனது மனைவிக்கு இன்று என்னை அறிந்து கொள்ள முடியாது அவர் டயமென்சா நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.அப்படி பாதிக்கப்பட்டுள்ள என்னை கடைக்கோ வீதியில் செல்லும் போது என்னைத் தூற்றுகிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் ரியர்அட்மிரால் சரத் வீரசேகர கூறுகிறார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் சமூகம் தன்னை அவமதிப்பது பற்றி வேதனையுடன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பேட்டியில் அவர் மேலும் 04 »»»

# அடக்கு முறைகள் மூலம் எம்மை அடக்க முடியாது

## மக்கள் வெள்ளத்தில் அநுர அதிரடி

தேசிய மக்கள் சக்தியின் எதிர்ப்பு பேரணி லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று இடம்பெற்றது. 02 »»»



# தேர்தலுக்கு தடங்கல்கள் ஏற்படுத்தினால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு



## தாக்கல் செய்யப்படும் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

”உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவோம் என்று நீதிமன்றில் தேர்தல்கள் ஆணைக்குழு வாக்குறுதி 02 »»»

# அநுர மீதான தாக்குதலுக்கு சஜித் கடும் கண்டனம்

தேசிய மக்கள் சக்தி போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை தாக்குதல் நடத்தப்பட்டதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவினூடாக எதிர்க்கட்சித் தலைவர் இத்தாக்குதலுக்கு தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

# தலைமைகளின் ஒருங்கிணைந்த

## செயற்பாட்டிற்கு பௌசியை தலைமையேற்க அழைப்பு

(சுஜப், எம் காசிம்)

முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் சமகால நெருக்கடிகளுக்குத் 02 »»»

# அரசியல் சதி, கோழைத்தனத்துக்கு தயாராவதை உடன் நிறுத்துங்கள்

## ஜனாதிபதி ரணிலுக்கு சஜித் எச்சரிக்கை



நிறைவேற்று ஜனாதிபதி உட்பட எவருக்கும் அரசியலமைப்பை மீறி செயற்படுவதற்கு உரிமை இல்லை எனவும்,அரசியல் சதி அல்லது அரசியல் கோழைத்தனத்திற்கு தயாராக வேண்டாம் என ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டுவதாக எதிர்க்கட்சித் தலைவர் 02 »»»

# ஐக்கிய குடியரசு என சம்பிக்கவின் புதிய கட்சி

## விபரங்கள் அடுத்த மாதம் அறிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக புதிய அரசியல் 02 »»»

# தூசன வார்த்தைகளால் ஏசினார் அமைச்சர் சுசில்

## ரோஹினி கவிரத்ண எம்.பி. முறைப்பாடு

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த 02 »»»

# உக்ரைன் போரை நிறுத்தும் அமைதிப் பேச்சுக்கு தயார்

## ஜேர்மன் பிரதமரிடம் மோடி தெரிவிப்பு

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

“உக்ரைன் போருக்கு தீர்வு காணும் அமைதி 02 »»»

## அடக்கு..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பொலிசார் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டம், மாநகர சபை சுற்றுவட்டம் ஆகிய சந்திகளுக்கு அப்பால் ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்வதற்கு அனுமதிக்கவில்லை. பொலிசாரின் கடுமையான வீதி தடையை உடைத்துக் கொண்டு செல்ல முடியாத நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் செயற்பட்ட போதிலும் பெருந்திரளான மக்கள் வெள்ளத்தில் அனுர குமார திசாநாயக்க உரையாற்றினார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது, மக்கள் ஆணையில்லாமல் ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, மக்கள் போராட்டத்திற்கு தடை உத்தரவு பெறுகிறார். நான் உட்பட 25 பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்று நீதிமன்றத் தடை உத்தரவை பெற்றிருக்கிறார். இந்தத் தடை எனக்கு இல்லை என்பதை ரணில் விக்கிரமசிங்க புரிந்து கொள்ள வேண்டும். மக்களுக்கு போட்டு இருக்கின்ற தடையாகவே இதனை நாம் பார்க்கிறோம்.

மக்களுக்கு தடைகளை போட்டு எங்களை அடக்கி விட முடியாது. இந்தப் போராட்டம், ஒரு முன்னோட்டம் மட்டுமே. அடுத்த கட்டம் எப்படி வெடிக்கும் என்பதை பொறுத்திருந்து பாருங்கள். ரணிலின் அட்டகாசங்களுக்கு நாம் அடிபணிய போவதில்லை. அவரை வீட்டுக்கு துரத்தும் வரை மக்கள் போராட்டத்தை தொடர்வோம்.

அரசாங்கத்தால் எங்கள் மக்கள் போராட்டத்தை அடக்கி விட முடியாது.

தேர்தலை ஒத்திப் போடும் ரணிலின் முயற்சியை முறியடித்து நாம் வெற்றி பெறுவோம்.என்றார்.


## உக்ரைன்..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பேச்சுவார்த்தைக்கு உதவ இந்தியா தயாராக உள்ளது" என ஜெர்மன் பிரதமர் ஓலப் ஸ்கால்ஸை சந்தித்து பேசிய பின் பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

ஜெர்மன் பிரதமர் ஓலப் ஸகால்ஸ் சனிக்கிழமை இந்தியா வந்தார். அவர் டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினார். இருவரும் 4-வது முறையாக சந்தித்து கொண்டனர். இந்திய வருகை குறித்து ட்விட்டரில் கருத்து தெரிவித்துள்ள ஓலப் ஸகால்ஸ், "இந்தியா மற்றும் ஜெர்மனி இடையே நல்ல உறவு உள்ளது. இதை மேலும் வலுப்படுத்த விரும்புகிறேன். எங்கள் பேச்சுவார்த்தையில் இது முக்கிய அம்சமாக இருக்கும். உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவது குறித்து நாங்கள் முக்கிய பேச்சுவார்த்தை நடத்த வுள்ளோம்" என குறிப்பிட்டுள்ளார்.

இருதரப்பு உறவுகள், பிராந்திய பிரச்சினைகள், உக்ரைன் விவ காரம் உட்பட உலகளாவிய பிரச்சினைகள் குறித்து ஜெர்மன் பிரதர் ஓலப் ஸ்கால்ஸ்



/ம், பிரதமர் மோடியும் ஆலோசனை நடத்தினர். அதன்பின் இருவரும் கூட்டாக பேட்டியளித்தனர்.

ஸ்கால்ஸ் அளித்த பேட்டியில், "உக்ரைனுக்குள் ரஷ்யா ஊடுரு வியதால் உலகமே அதன் விளைவுகளை அனுபவிக்கின்றன. வன்முறை மூலம் யாரும் எல்லை களை மாற்ற முடியாது. உக்ரைன் போரால் ஏராளமான இழப்பும், பேரழிவும் ஏற்பட்டுள்ளது. இந்த போரால், ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் பாதிக் கப்படாமல் இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்" இவ்வாறு அவர் கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடி அளித்த பேட்டி யில் கூறியதாவது: உக்ரைன் பிரச்சினை தொடங்கியதிலிருந்தே, இதற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என இந்தியா வலியுறுத்தி வருகிறது. எந்தவித அமைதி பேச்சு நடவடிக்கைக்கும் உதவ இந்தியா தயாராக உள்ளது. சுரோனா தொற்று மற்றும் உக்ரைன் பிரச்சினையால் ஏற்பட்ட பாதிப்புகளை ஒட்டுமொத்த உலகமே உணர்ந்துள்ளது.தீவிரவாதத்துக்கு எதிராக போராடுவதில் இந்தியா-ஜெர்மனி இடையே நல்ல ஒத்துழைப்பு நிலவுகிறது. எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு முடிவு கட்ட, உறுதியான நடவடிக்கை அவசியம் என்பதை இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன. இரு நாடுகள் இடையேயான உறவில் ராணுவ ஒத்துழைப்பு முக்கிய தூணாக இருக்கும். இருதரப்பு, பிராந்திய மற்றும் உலகளாவிய விஷயங்கள் குறித்து நாங்கள் விரிவாக விவாதித்தோம். இந்தியாவில் முதலீடு செய்வதில் ஜெர்மனி முக்கிய நாடாக உள்ளது. இரு பெரிய ஜனநாயக பொருளாதார நாடுகள் இடையே ஒத்துழைப்பு அதிகரிப்பது இந்தியா மற்றும் ஜெர்மனி மக்களுக்கு பலன் அளிக்கும் இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

## தேர்தலுக்கு..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வழங்கியுள்ளது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு யாராவது தடங்கல் ஏற்படுத்தினால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்ய முடியும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. உள்ளூராட்சித் தேர்தலைப் பேசுபொருளாக்கி சர்ச்சையை உருவாக்கி மக்களுடைய கவனத்தை திசை திருப்புவதற்காகவும் சில முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி சார்பிலும் அவ்வாறான முயற்சிகள் நடைபெற்றாலும் தேர்தல் மிகவும் அத்தியாவசியமான விடயம். ஒரு நாடு ஜனநாயக நாடா? இல்லையா? என்பதை தீர்மானிப்பதற்கு, உரிய காலத்திலே தேர்தல்கள் கிரமமாக நடத்தப்படுவது முக்கியமான ஒரு அம்சமாகும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது அந்தப்படியே நடத்தப்பட வேண்டும். சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. அதற்கு ஏற்ற விதமாக நிதியமைச்சும் ஆரம்ப விடயங்களுக்கென்று 100 மில்லியன் ரூபா பணம் கொடுத்துள்ளது. அதற்கு மேல் எதையும் நிதியமைச்சின் அனுமதி இல்லாமல் கொடுக்க முடியாது என்று திறைசேரியின் செயலர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருக்கின்றார்.

நிதி அமைச்சராக இருப்பவர் நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதேபோல ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் இருப்பவரும் அவரே. அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் கொழும்பு மாநகர சபையை அண்டிய பகுதிகளில் மும்முரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

எங்களைப் பொறுத்தவரை மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அதேபோல் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல் மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படவேண்டும். அதை தேர்தல் ஆணைக்குழு செய்யும் என எதிர்பார்க்கின்றோம். அரச பணியாளர்கள், அமைச்சர்கள், ஏன் ஜனாதிபதியாகக் கூட இருக்கலாம், யாரும் தேர்தலை நடத்துவதை தடுக்கும் செயற்பாட்டுக்கு உதவியாக இருக்கக் கூடாது.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இணங்கி ஒத்துழைத்துச் செயற்பட தவறுகின்றமை அரசமைப்பின் 104 (ஜி) (ஜி) (1) பிரிவுக்கு அமைவாக தண்டனைக்குரிய குற்றமாகும். அதைவிட தேர்தலை நடத்துவோம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்துக்கு வாக்குறுதியளித்துள்ள நிலையில் அதனை நிறைவேற்றுவதை தடுக்கும் வகையில் எவராவது செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்படலாம்" - என்றார்.

## தலைமைகளின்..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தீர்வுகாண்பதற்கு,தலைமைகளை ஒருங்கிணைத்துச் செயற்படுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்தலைமைகளை ஓரணியில் ஒன்றிணைப்பது சாத்தியமற்றுள்ளதால், ஒருங்கிணைந்த செயற்பாடுகளையாவது முன்னெடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.இந்த ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள், முஸ்லிம் சமூகத்தின் மூத்த அரசியல்வாதியும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ,எச்,எம்,பௌஸ ி தலைமையில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி சபைகளில் குறைக்கப்படவுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை,விஸ்தரிக்கப்படவுள்ள வட்டாரங்கள் மற்றும் இதற்காக முன்னெடுக்கப்பட உள்ள எல்லை நிர்ணய ஆய்வுகளுக்கு ஆலோசனைகள் வழங்கும் வகையில், இந்த ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் அமையவுள்ளன. கிழக்கில்,எதிர்நோக்கும் காணி மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் இதுவரைத் தீர்க்கப்படாதுள்ளன. இப்பிரதேசத்தை தளமாகக் கொண்டு இயங்கும் முஸ்லிம் தலைமைகளிடம் ஒற்றுமையில் லாததாலே,இப்பிரச்சினைகள் இழுபறியாகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு,ஏக குரலாகவும், ஒருமித்த கருத்தாகவும் பிரேரணைகள் முன்வைக்கப்படவுள்ளது.

இவ்வாறு,ஒருமித்த இணக்கப்பாட்டுடன் முன்வைக்கப்படும் பிரேரணைகளை அரசாங்கம் அவசியம் நிறைவேற்ற வேண்டும்.அல்லாத பட்சத்தில் ஒருங்கிணைந்த அழுத்தங்களை இந்தச் செயற்பாட்டுக் குழு முன்வைக்கவுள்ளது.

நாட்டின், தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தனித்துவ தலைமைகளின் பேரம்பேசலை பலமிழக்கச் செய்துள்ள நிலையில்தான்,இந்த ஒருங்கிணைப்புச் செயற்பாட்டின் அவசியம் உணரப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வரவுள்ள கட்சி குறித்தும், அமையப்போகும் அரசாங்கம் பற்றியும் ஆரூடங்கூற இயலாதுள்ள இன்றைய நிலையில்,தேசிய அரசியலில் வியூகம் வகுக்குமளவுக்கு கள நிலவரங்கள் இல்லை. விசுவாசம், நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்புக்களூடாகவே, சிங்கள தேசியவாதத்தை நெருங்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதனால், பேரம்பேசலை விடுத்து,பரஸ்பர அரசியலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுதான்,முஸ்லிம் தலைமைகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் தேவையை ஏற்படுத்தியுள்ளது.

இன்னும், சிங்கள தேசிய கட்சிகளில் முஸ்லிம் பிரிவு என்றோ அல்லது ஏதாவது விஷேட அமைப்புக்களோ இல்லாதுள்ளமை குறித்தும் முஸ்லிம் சிவில் சமூகம் கவனம் செலுத்தியுமிருக்கிறது.தனித்துவ தலைமைகளின் அண்மைக்கால போக்குகளில் அதிருப்தியுற்ற சிங்கள தேசிய கட்சிகள், இவ்வாறான இனத் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் சிறிய கட்சிகளை சிதைக்கும் அல்லது உடைக்கும் நோக்கில் செயற்படுகின்றதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. ராஜபக்ஷக்களின் ஒரே விசுவாசியாக இருந்த தேசிய காங்கிரஸ்க்கு ஏற்பட்டுள்ள நிலையை வைத்தே, இக்கருதுகோளும் பலப்பட்டு வருகிறது.இது இவ்வாறிருக்கையில்,தெற்கு முஸ்லிம்களின் அடையாளமாகத் தென்பட்டு வந்த முஜிபுர்ரஹ்மானின் பதவி விலகலுக்குப் பின்னரே இந்த சந்தேகம் வலுத்து வருகிறது.

## ஐக்கிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளார்.

புதிய கட்சி, ஐக்கிய குடியரசு கட்சி என்ற பெயரில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு அடுத்த மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைக்கு ஐ க்கிய மக்கள் சக்தி கட்சி ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள சம்பிக்க ரணவக , 43வது படையணி எனும் பெயரில் தனி அமைப்பொன்றை நடத்தி வருகின்றார்.

அத்துடன் உள்ளூராட்சி தேர்தலில் குமார வெல்கம தலைமையிலான நவ லங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து வேட்பாளர்களை நிறுத்தி உள்ளார்.

இந்நிலையில் புதிய அரசியல் கட்சி துவங்கிய பின், ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படவுள்ள அவர், பிரதமர் பதவியை குறி வைத்து காய் நகர்த்தி வருவதாக தெரிய வந்துள்ளது.

சம்பிகவின் அரசியல் முன்னெடுப்புகளுக்கு இந்தியாவின் ஆளும் கட்சியான பி.ஜே. பி.யின் தாய் அமைப்பு ஆர்.எஸ்.எஸ் . மற்றும் இஸ்ரேலிய அமைப்புகளும் உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஒரு நாடு என்ற ரீதியில் பழைய முறையில் சிந்தித்து சிந்தித்து நாம் எமது மதங்கள்,எமது இனங்கள் பற்றி பேசி இன,மத பேதங்களை உருவாக்கி,தாம் தேசப்பற்றாளர்கள் என்ற மனநிலையை கட்டமைத்து அதே சேற்றில் சிக்கிக் கொண்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சில காலத்திற்கு முன்பு பழங்குடி மோதல்கள் இருந்த ருவண்டா இப்போது ஆபிரிக்காவின் சிங்கப்பூர் என்று அழைக்கப்படுவதாகவும், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் 53 சதவீதம் பேர் படித்த பெண்களாக இருப்பதாகவும், இவ்வாறானதொரு மோதலும் யுத்தமும் இருந்த எமது நாட்டில் யுத்தம் முடிவடைந்தாலும் நல்லிணக்கம் என்பது கெட்ட வார்த்தையாக மாறியுள்ளதாகவும், இன,மத வேறுபாடுகளை உருவாக்கியதன் விளைவாகவே எமது நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த வங்குரோத்து நிலைக்கு சிங்கள,தமிழ், முஸ்லிம் பேர்கர் என்ற பாகுபாடு இல்லை என்பதால் அனைத்து இன,மதத்தினரும் இணைந்து இந்த வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல ஒன்றிணைய வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இன,மத பேதங்களைத் தூண்டி நாட்டை அழிக்கும் நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,சாதி,மத பேதங்களை ஒதுக்கிவிட்டு,நாட்டை கட்டியெழுப்ப ஒன்றாக ஒன்றிணையுமாறும் அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன், நாடு முழுவதும் பிரதேச செயலக மட்டத்தில் உற்பத்தி கைத்தொழில்களை உருவாக்கும் சகாப்தத்தை ஆரம்பிப்பதாகவும்,டிஜிட்டல் புரட்சி மூலம் கல்வித்துறையில் புதிய மாற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று (24) இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

## தூசன...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தன்னை தூசன வார்த்தைகளால் ஏசியதாக மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன சபாநாயகருக்கும் பொலிஸ /க்கும் முறைபாடு செய்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளியன்று இடம்பெற்ற விவாதம் ஒன்றின் போது கல்வி அமைச்சின் கட்டடத்துக்குள் எவ்வித காரணமும் இன்றி ஆசிரியர்கள் சிலர் பொலிஸாரால் தாக்கப்பட்டது குறித்து கேள்வி எழுப்பிய போதே அமைச்சர் தூசன வார்த்தைகளைக் கொண்டு பேசியது பாராளுமன்ற உரையில் நேரடியாக ஒளிபரப்பியது.

இது தொடர்பாக ரோஹினி கவிரத்ன தனது எதிர்ப்பைத் தெரிவித்ததோடு, ஐக்கிய மக்கள் சாத்தியினர் இது தொடர்பாக பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

பெண் உறுப்பினர் ஒருவருக்கு இவ்வாறு தூ சன வார்த்தைகளால் பேசியது குறித்து பலத்த எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## பிசுபிசுத்துப்போன...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதமர் இராஜினாமா செய்வதற்கு மறுத்ததனால் மொட்டுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு மேற்கொண்ட முயற்சி பிசிபிசித்துப் போயுள்ளதாக நேற்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல் ஒன்பதாம் திகதி முதல் நடைபெற ஏற்பாடுகள் இருந்த நிலமையில் 6 ஆம் திகதியளவில் மஹிந்த ராஜபக்சவை பிரதமராக்கி அதன் மூலம் மக்கள் ஆதரவை எடுப்பதற்கு மொட்டுக்கட்சி குழுவொன்று திட்டமிட்டு செயல்பட்டு வந்தது.மஹிந்தவை பிரதமராக்குவதற்கு பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறிய டலஸ் அழகப்பெரும தலைமையிலான கூட்டமைப்பு அணியினரின் ஆதரவை கோரியிருந்ததாக அக் கட்சியின் முக்கியஸ்தர் சன்ன ஜயசுமன தெரிவித்திருந்தார்.

சன்ன ஜயசுமன இதனை பகிரங்கப்படுத்தியதையடுத்து மொட்டுக் கட்சிக்குள் இப் பிரச்சினை பூதாகரம் எடுத்தது.

பிரதமரிடம் பதவி விலகுவதை பற்றி கேட்ட போது அது முற்றிலும் பொய்யானது என தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டை சீர்குலைப்பதற்கான நடவடிக்கை இது என்றும் பிரதமர் தெரிவித்தார்.அவ்வாறானதொரு பிரேரணையோ,கலந்துரையாடலோ இடம்பெறவில்லை என பிரதமர் தெரிவித்தார்.

இது குறித்து பிரதமரின் ஊடகச் செயலாளர் ரோகன வெலிவிட்ட அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யப் போவதாக வெளியிடப்பட்டுள்ள செய்தி முற்றும் பொய்யானது அதேநேரம் தமது பதவியிலிருந்து பிரதமருக்கு இராஜினாமா செய்யுமாறு எத்தரப்பிலிருந்தும் அழுத்தம் கொடுக்கப்படவில்லை.இது அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை சீர்குலைப்பதற்கான சதியின் ஓர் அங்கம் ஆகுமென பிரதமரின் ஊடகச் செயலாளர் லலித் ரோகன லியனகே வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# Victory Cup வெற்றி கிண்ணத்தை சுவிகரித்த பேருவளை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை







களுத்துறை மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் கடினப்பந்து கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் பங்களாதேஷ் உயர்ஸ்தானிகரலாயத்தின் அனுசரணையுடன் பேருவளை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை மற்றும் பயாகல பண்டாரநாயக்க மகா வித்யாலயம் ஆகிய இரு பாடசாலைகளுக்கு இடையிலான கடினப்பந்து ஒரு நாள் சுற்றுப்போட்டி (23) மக்கொன சரே கடினப்பந்து விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதான அதிதியாக பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் மதிப்பிற்குரிய தாரிக் முஹம்மத் ஆரிபுல் இஸ்லாம் அவர்கள் கலந்துகொண்டார். மேலும் களுத்துறை மாவட்ட காவல்துறை உதவிக் கண்காணிப்பாளர் (ASP, Kalutara District) துமிந்த ராஜபக்ஷ அவர்கள் இன்றைய நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த ஒரு நாள் சுற்றுப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பண்டாரநாயக்க மகா வித்தியாலயம் 38 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 156 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை,

அதை எதிர்த்து களமிறங்கிய அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை 31 ஓவரில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 157 ஓட்டங்களை பெற்று Victory Cup - 2022 எனப்படும் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

அல்/ஹமேசரா தேசிய பாடசாலையின் அதிபர் திரு எம்.ஆர்.எம் ரிஸ்கி, பண்டாரநாயக்க மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி கே.பி தயாணி அவர்களும் தங்களது பூரண ஒத்துழைப்பினை வழங்கி இருந்தனர். மேலும் இந்த செயற்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் அவர்கள் செயற்பட்டிருந்தார்.

இந்த செயற்திட்டம் மென்மேலும் வெற்றியடைவதற்கு பாடசாலைகளினுடைய பழைய மாணவர் அமைப்பு, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு, நலன்விரும்பிகள் மற்றும் அனுசரனை நிறுவனங்கன் ஆகியவற்றின் உதவிகளோடு களுத்துறை மாவட்டத்தில் கடினப்பந்து விளையாட்டுத்துறை ஊக்குவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.






பலஸ்தீன் தூதுவர் கலாநிதி சுகைர் எம்.எச். டார் செய்யத் அஸ்கிரிய வணத்துக்குரிய கலாநிதி வராக்கா கொட தம்மசித்தி சிறி பாக்கண்ட ஜானரத்தினபிந்தான மஹாநாய்கக தேரரை அத்துடன் மல்வத்தை திப்புட்டுவாவே சுமங்களாவே தேரர்களை கண்டியில் அஸ்கிரிய மாகா பௌத்த பண்சலையில் வைத்து இச்சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பில பலஸ்தீன் நாட்டில் நடைபெறும் யுத்தங்கள் அந்த நாட்டில் உள்ள காணிகள் உடைமைகள் கொடுமைகளை இஸ்ரேல் அபகரிப்பு பற்றிய பிரச்சினைகளை பலஸ்தீன் தூதுவர் அஸ்கிரிய தேரர்களுக்கு விளக்கிக் கூறினார்.

(அஷ்ரப் ஏ சமத்)






# அரங்கம்

## நாட்டின் ஜனாதிபதி முகமூடி நடனக்காரர் என்பது தெரியுமா?

**பொதுத்தேர்தலா?**

பொதுத்தேர்தல் நடத்தப்படுமா? பிற்போடப்படுமா என்ற வாக்குவாதங்களுக்கு மத்தியில் இவ்வார அரசியல் களம் சூடாகவே இருந்தது.

பாராளுமன்றத்திலும் வெளியிலும் தொடர்பாக வாக்குவாதங்கள் மும்முரமடைந்திருந்தன.

இறுதியில் பொதுத் தேர்தல் புதிய தினத்தில் நடைபெறாது என்ற அறிவிப்பும் இவ்வாரத்தில் மேற்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றத்தில் வியாழனன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும்போது தேர்தல் ஒன்றுமில்லை ஒத்திப் போடுவதற்கு தேர்தலும் இல்லை என்று தெரிவித்த கருத்து அரசியல் களத்தில் பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகி இருக்கின்றது.

தேர்தலை ஒத்திப் போடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் கண்டித்து பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள். இக்கட்டத்தில் சட்டமூலமொன்றை நிறைவேற்றி விட்டு சபையை சபாநாயகர் ஒத்தி வைத்தார்.

ரணில் விக்கிரமசிங்க வியாழனன்று பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தார்.

அவர் உரையாற்றும் போது தேர்தல் சம்பந்தமாகப் பேசிய கருத்துக்களை அடுத்து உடனடியாகத் தயாரான எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பதாகைகளைத் தூண்டி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

ஆர்ப்பாட்டதோடு ரணில் விக்கிரமசிங்க சபையில் இருந்து வெளியேறானார்.

**"வெஸ்" நடனம் படித்த ஜனாதிபதி**

வார இறுதியில் ஜனாதிபதி கண்டிக்கச் சென்றுள்ளார். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 75 ஆண்டு நிறைவையொற்றி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜனரஜப் பெரஹெர கண்டியில் நடைபெற்றது.

இந்த பெரஹெரவுக்குக் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்த ஜனாதிபதி, மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து உரையாடினார். உத்தியோகபூர்வமன்றி நட்புரீதியான கலந்துரையாடலாகவே இது இடம்பெற்றது.

இது முக்கியமாக பௌத்த பாலி பல்கலைக்கழகம் எதிர் நோக்கிய பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடினார்கள். ரணில் விக்கிரமசிங்க பெரஹரவை பொதுமக்களோடு இருந்து பார்வையிட்டார். இவ்வாறான ஒரு பெரஹரவை நடாத்தியது குறித்து மக்கள் அவர்களைப் பாராட்டினார்கள். சேர், எமது மக்கள் தலதா மாளிகையுடன் இணைந்தவர்கள். இச்சந்தர்ப்பத்தில் இப்பெரஹர ஒன்றை நடாத்தியது எங்களுக்கு கௌரவம். அருகில் இருந்த கண்டி மாநகர முதல்வர் கேசர சேனாநாயக்க கண்டி வாழ் மக்கள் சார்பில் நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு அருகே வந்த பந்துல குணவர்தன, ஜனரஜ பெரஹர பற்றிப் பேசும் பொழுது ஜனாதிபதி பந்துலயை விளித்து ஒரு புதிய கதையைச் சொன்னார். பந்துல உங்களுக்குத் தெரியுமா? இலங்கையிலே இருக்கும் ஜனாதிபதி முகமூடி நடனக்காரர். வெஸ் நடனம் என்பது முகமூடி நடனம். ஜனாதிபதி சிரித்துக் கொண்டே அதனைச் சொன்னார். ரணில் விக்கிரமசிங்க பாடசாலை காலத்தில் வெஸ் நடனம் படித்தவர் என்பதை தற்போது பந்துலவுக்கு ஞாபகத்துக்கு வந்தது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவும் இந்த நடனத்தை சிறுவர் காலத்தில் படித்திருக்கிறார். ஜனரஜ பெரஹெர நடைபெற்ற அடுத்த தினம் கண்டியில் பல பிரதேசங்களுக்கு மழை பெய்தது.

ஜனாதிபதி இவ்வாறான பெரஹெரவில் கலந்து கொண்டது பல வருடங்களுக்குப் பின்பாகும்.

**செங்கடஹல நகரம் அபிவிருத்தி**

திங்களன்று காலை அமைச்சரவை கூட்டம் இம்முறை கண்டி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

செங்கடஹல நகரத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஜனாதிபதி சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரமும் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

அதற்கு மத்தியில் உயர் கல்வி அமைச்சு அனுப்பி வைத்திருந்த ஆவணமொன்றும் அமைச்சரவைச் செயலாளரினால் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது. அந்த ஆவணத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் விடுத்துள்ள கோரிக்கைகள் இருந்தன. இந்த ஆவணத்தைக் கண்ட ஜனாதிபதியின் வெற்றியில் வரிகள் தோன்றின. அதிலே இருக்கின்ற பல கோரிக்கைகள்தான் அதற்குக் காரணமாகும். விசேட கொடுப்பனவு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் வரி நீக்கம் உட்பட பல பிரேரணைகள் இருந்தன.

விரிவுரையாளர்களுக்கு கிடைக்கும் பட்டப்பின்படிப்பின் போது வெளிநாடு செல்வதற்கு குடும்பத்தில் அங்கத்தவர்களுக்கும் அரசு செலவில் விமான டிக்கெட்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையாகும். இதனை அவதானித்த பந்துல குணவர்தன என் கண்கள் மேலே சென்றன. சேர் இதில் இப்படியான கோரிக்கைகளை ஏன் விடுக்கிறார்கள்?. இதனை என்றால் செய்ய முடியாது ஏனையவைகள் பற்றி கவனிப்போம் என்று ஜனாதிபதி தனது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவைப் பார்த்துக் கூறினார்.

அச்சந்தர்ப்பத்தில் பந்துல குணவர்தன இவர்கள் நாட்டுக்கு ஒன்றைச் சொல்கிறார்கள். எங்களுக்கு வேறு ஒன்றைச் சொல்கிறார்கள் என்று கூறினார்.

அன்று மாலை ஜனாதிபதி கண்டி மாநகரின் வர்த்தகர்கள் மற்றும் சட்டத்தரணிகள் உட்பட முக்கியஸ்ர்களை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்தார்.

ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை அநேக வர்த்தகர்கள் பாராட்டியதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவிக்கின்றது.

தற்போதைய வரிக் கொள்கையையும் அவர்கள் பாராட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடலின் பின் இடம்பெற்ற ஒன்றுகூடலின் போது ஜனாதிபதி முன்னெடுக்கும் பொருளாதாரக் கொள்கையை அவர்கள் பாராட்டியுள்ளனர். பாதுகாப்பு பேரவையின் கூட்டத்துக்கு செல்லும் வழியில் ஜனாதிபதி தாய்மொழி தினத்திற்காக வெளியிடப்பட்ட சிங்கள தமிழ் எழுத்துக்கள் என்ற நூலை கையேற்பதற்காகச் சென்றிருந்தார். அதிக நேரம் அங்கு தங்கி இருக்காது புத்தகத்தைப் பொறுப்பேற்ற பின் பாதுகாப்பு பேரவை கூட்டத்திற்குச் சென்றார்.

அன்று மாலை ஐ.தே.க. தலைமையகத்திற்குச் சென்ற ஜனாதிபதி ஐ.தே.க. செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டார். கட்சி செயலாளர் ரங்கே பண்டார செயற்குழுவுக்கு சமர்ப்பித்த விசாரணை அறிக்கையை முன் வைத்தார்.

ஒழுக்காற்று விசாரணை 1137 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட ஒழுக்க விசாரணை பற்றிய அறிக்கை யைச் சமர்ப்பித்தார். ஐ.தே.க.வில் தெரிவாகி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கும் எதிராகவும்

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2023 FEBRUARY 27 - MONDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

## புதிய வக்ஃப் சபையினர் முன்னுள்ள பொறுப்பு!

புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வக்ஃப் சபை அங்கத்தவர்களுக்கு தீர்வுகளை வேண்டி வக்ஃப் சபைக்கு முன்வைக்கப்படும் பிரச்சினைகளை காலம் தாழ்த்தாது இன்றளவில் சுமூகமாக தீர்த்து வைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

வக்ப் சபை புதிய அங்கத்தவர்களுக்கும், அமைச்சருக்கும் இடையே இடம்பெற்ற முதலாவது சந்திப்பின் போதே அமைச்சர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

வக்ப் சபை நல்லிணக்க மையமாக அமைவதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.வக்ப் சபையில் சட்டத்தரணிகள் பிரசன்னமாகி வாதாடுவது தவிர்க்கப்படல் வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

2500க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் இருக்கின்றன, பள்ளிவாசல்களை நிர்வாகிகளை நியமிப்பதில் அடிக்கடி பிரச்சினைகள் எழுகின்றன.பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சட்டத்தரணிகளை நாடுகிறார்கள்.இதற்கு பள்ளிவாசல்களுக்குரிய பணம் செலவிடப்படுகின்றது.பள்ளிவாசல்கள் இச் சர்ச்சைகளுக்கு உடன் தீர்வு வழங்காததனாலே சட்டத்தரணிகளை வாடகைக்கு பெற்று நியாயம் பெற முயற்சிக்கிறார்கள்.சில பள்ளிவாசல் வழக்குகள் நீண்டகாலமாக இருந்து வருகின்றன.இந்த நிலமையை இல்லாமல் செய்வது குறித்து புதிய வக்ஃப் சபையினர் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

பள்ளிவாசல்கள் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது குறித்தும் முறைப்பாடுகள் வந்த வண்ணமே உள்ளன.இது தொடர்பாகவும், புதிய வக்ஃப் சபையினர் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

நமது மூதாதையர்கள் உயர்ந்த நோக்கங்களை வைத்தே வக்ஃப் சபை முறையை உருவாக்கினார்கள்.தமிழ் நாட்டில் வக்ஃப் சபை மிக சிறப்பாக இயங்குகின்றது. தமிழ் நாட்டில் உள்ள வக்ப் சொத்துக்களை நிர்வகிப்பது குறித்து விசேட கவனம் செலுத்தி வருகின்றனர்.எமது நாட்டில் உயர்ந்த எண்ணத்துடன் வசதி படைத்த பலர் தமது சொத்துக்களை வக்ஃப் செய்து வருகின்றனர்.ஆனால் அவை சரியாக நிர்வகிக்கப்படுவதில்லை.

வக்ப் சொத்துக்கள் எங்கெங்கு இருக்கின்றதோ அவற்றின் விபரங்களை பெற்று அவற்றை வக்ஃப் சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.அவற்றின் வருமானங்கள் சமூகத்தின் தேவைக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.குறிப்பாக வறிய பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு உதவுவதற்கு இந்தப் பணத்தை பயன்படுத்த முடியும்.புலமைப் பரிசில்களை அறிமுகப்படுத்தி வக்ஃப் சபையினால் ஏழைப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு உதவ முடியும்.வக்ப் சபை இவ்வாறு புதிய செயற்பாடுகளை சிந்திப்பது அவசியமாகும்.

பள்ளிவாசல்களிலே காணப்படும் இயக்க வேறுபாடுகளுக்கு இடமளிக்கக் கூடாது. பள்ளிவாசல்களை அந்த ஊரின் ஒற்றுமை மையமாக ஆக்குவது குறித்து வக்ஃப் சபையினர் சிந்திக்க வேண்டும்.புதிய வக்ஃப் சபையினர் அதன் செயற்பாட்டுகளில் புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தி சமூகத்துக்கு வழிகாட்ட வேண்டும்.இதனை முன்னெடுப்பதற்கு வக்ஃப் சபையினருக்கு எமது வாழ்த்துக்கள்.



அகில இலங்கை வை.எம் எம் ஏ பேரவையின் முன்னாள் தலைவரும் இலங்கை மலேசியா வர்த்தக சங்கத்தின் தலைவர் காலித் பாருக் மலேஷியாவில் நடைபெறும் இஸ்லாமிய மகா நாட்டில் கலந்து கொள்வதற்கு சென்றிருந்த போது அவரது நீண்ட கால நண்பரான மலேஷியா பிரதமர் அன்வர் இப்ராகிமைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

### என்னை...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

கூறியதாவது.

நான், இஸ்ரேல் நாட்டுக்கு சென்று அங்கு பயிற்சி பெற்ற தற்கொலை தாக்குதல்கள் செய்யும் கப்பல்களுடன் நான் எனது சுய விருப்பத்துடன் யாருமே முன் வராத நிலையில் சென்ற முதலாவது வீரன் நான். இலங்கை கடற்படையின் வரலாற்றில் முதன் முதலாக ளுஉழவடயனெ உழஅஅயனெநச ழக வாந கயளவ யசைஉசயகவ எனும் பட்டம் என்னையே சாருகிறது.

நாட்டின் மின்சார கட்டணம் உயர்த்தப்பட்ட பொழுது எங்களைப் பார்த்து இந்த மக்கள் கேட்கிறார்கள் உங்களுக்கு இப்போது திருப்தியா என்று கேட்கிறார்கள் நான் ஒரு முறை உடற்பயிற்சிக்காக வெளியே சென்று இருக்கும் போது உங்களுக்கு இப்போது திருப்தியாக என்று என்னை பார்த்து கேட்கிறார்கள்.

நான் 35 வருடங்கள் கடற்படையில் பணிபுரிந்தேன் .25 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடலில் இருந்தேன் 45 நாட்களுக்கு கடலுக்கு செல்வோம் வெறுமனே மூன்று நாட்களை வீட்டில் இருப்போம் வீட்டில் நடக்கும் எந்த ஒரு முக்கிய நிகழ்வுக்கும் நான் பங்கு பற்றியது இல்லை அத்தனை வேலைகளையும் எனது வெற்றிடத்தையும் நிரப்பி முழுமையாக செய்தது எனது மனைவி இன்று எனது மகன் ஒரு வைத்தியர் மகள் வைத்த துறைக்கு சம்பந்தப்பட்டவர் இவ்வாறு இருக்க எனது மனைவி இன்று நான் யார் என்று அறிய மாட்டார் வீட்டினில் செல்லும் பொழுது ஒரு விருந்தினர் என்று பார்க்கிறார் அவருக்கு டிமென்ஸா நோய் இருக்கிறது அவர் ஒரு காலம் தனியாக வேலை செய்தார் .தனியாக எல்லாத்தையும் எல்லா இடங்களும் சென்றார் அத்தனை வேலைகளையும் தனி ஒரு மனிதனாக செய்தார்.இவ்வாறு இறுக்கையில் நான் வீட்டில் செல்லும் போது என்னை ஓர் விருந்தினரை போல் பார்க்கும் பொழுது எனக்கு எவ்வாறு ஒரு வேதனை இருக்கும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். மேலும் கடைக்குச் செல்லும் பொழுது, என்னை தூற்றும் பொழுது, எனக்கு எவ்வாறான வேதனை இருக்கும்

நான் என்ன செய்ததற்காக இவர்கள் இவ்வாறு கதைக்கிறார்கள் நான் ஒட்டுமொத்த குடும்பத்தையும் இழந்ததற்காகவா அல்லது எனது இளைய பருவத்தை கடலில் கழித்ததற்காகவா இவர்கள் இவ்வாறு கதைக்கிறார்கள் இதன் காரணமாகவே நான் எனது ஊருக்கு செல்ல முடியாது என்று கூறுகிறேன் இது என்னுடைய பிழைகள் அல்ல இதை முதலில் இருந்து சரியாக செய்து கொண்டு வந்து இருந்தால் இந்த நாட்டிற்கு இவ்வாறான பிரச்சனைகள் ஏற்பட்டு இருக்காது. இது குறிப்பிட்ட ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவே நாட்டின் நிலைமைக்கு காரணம் என்பதை நான் உறுதியாக கூறுவேன் என்றார்.

### பிரதமரிடம்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

எல்லை நிர்ணய குழு மாவட்ட மட்டத்தில் பெற்றுக் கொண்டுள்ள பரிந்துரைகள், வெவ்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய பரிந்துரைகள் மற்றும் தமது முன்மொழிவுகள் என்பவற்றைப் பரிசீலனை செய்து மாவட்ட மட்டத்திலான எல்லை நிர்ணய பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மாவட்டங்களுக்கு விஜயம் செய்து குறித்த அறிக்கைக்கு தேவையான பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய மார்ச் 31ஆம் திகதிக்குள் எல்லை நிர்ணயம் தொடர்பான இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

25 மாவட்டங்களில் 15 மாவட்டங்களின் செயற்பாடுகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. மேலும் 6 மாவட்டங்களின் செயற்பாடுகள் 80 சதவீதம் நிறைவடைந்துள்ளன. ஏனையவற்றில் இரு மாவட்டங்களின் செயற்பாடுகள் மாத்திரமே 50 சதவீதத்தையும் விடக் குறைவாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எனவே எமது முழுமையான அறிக்கையை எதிர்வரும் மார்ச் 25 - 31ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் தயாரித்து சமர்ப்பிக்கவும், இடைக்கால அறிக்கையை அடுத்த வாரம் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானித்துள்ளோம்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

## மனநலமும் ஆலோசனையும்

# எங்களை மேம்படுத்துவோம்

உங்கள் லட்சியத்தை எப்படி அடைவது என்று நீங்கள் யோசிக்கலாம்.

நீங்கள் உங்களில் அழகான வளர்ச்சியை, மாற்றத்தை அடைய முயற்சி செய்யலாம்.

இருப்பினும், ஒவ்வொருவரும் அவரவர் மனநிலையின் அடிப்படையில் அதைப் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

எமக்கு இரண்டு வகையான மனநிலைகள் உள்ளன.

ஒன்று

நிலையான மனநிலை மற்றது

வளர்ச்சி மனநிலை.

நிலையான மனநிலை கொண்டவர்கள் திறமை, ஆற்றல் என்பன தமக்குள் வேரூன்றியிருப்பதாக நம்புகிறார்கள்,

மேலும் தமது திறன்களை, அவ்வாறே ஆற்றல்களை மாற்ற முடியாது என்று நினைக்கிறார்கள்.

ஆனால் வளர்ச்சி மனநிலை கொண்டவர்கள் கடின உழைப்பு மற்றும் முயற்சி மூலம் தங்கள் திறமைகளை மேம்படுத்த முடியும் என்று நம்புகிறார்கள்.

தங்களால் தம்மை மேம்படுத்த முடியும் என்று நம்புகிறவர்கள் - அதாவது, வளர்ச்சி மனப்பான்மை கொண்டவர்கள் - அவர்கள் தேர்ந்தெடுக்கும் எந்தத் துறையிலும் சாதிக்க அதிக வாய்ப்புகள் இருப்பதாக ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆகவே, சுயமான உந்துதல் அதாவது நாங்கள் எங்களை எப்போதும் ஊக்குவிக்கும் மனப்பான்மை வாழ்வின் வெற்றியில் ஒரு முக்கிய அங்கமாகும்.

எங்களில் சில தரங்களை, தகமைகளை மேம்படுத்த அல்லது பூர்த்தி செய்ய வேண்டும் என்ற ஆசை ஏமக்கு இருக்க வேண்டும்.

தனிப்பட்ட இலக்குகளை அடைவதற்கான அர்ப்பணிப்பு எமக்கு கட்டாயம் இருக்க வேண்டும்.

“வாய்ப்புகள் கிடைக்கும் போது செயல்படத் தயார்“ என்ற முன்முயற்சியையும் ஆசையையும் நாம் கொண்டிருக்க வேண்டும்.

பின்னடைவுகளை எதிர்கொண்டு இலக்குகளைத் தொடரும் திறனை நாம் பெற்றிருக்க வேண்டும்.

இவை ஒவ்வொன்றும் நிச்சயமாக எம்மை வெற்றிக்கு அழைத்துச் செல்ல மிக முக்கியமாக தேவைப்படும் விடயங்கள் ஆகும்.

இவை வளர்ச்சி மனநிலையின் அழகான அடையாளங்களாகும்.

---



# தேசிய அரசியலிலிருந்து தெற்கு முஸ்லிம்களின் தலைமையை ஓரங்கட்டும் முயற்சிக்கு எதிர்ப்பு!



சுஐப்,எம்,காசிம்

முஜிபுர் ரஹ்மானின் பதவி விலகல், தெற்கு முஸ்லிம் தலைமைத்துவத்தில் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதாக உணரப்பட்டுள்ளது. இளம் எம்.பி ஒருவர் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளதை குறிப்பாக, கொழும்பு மாவட்ட முஸ்லிம்கள் விரும்பவில்லை. இதன், எதிரொலிகளை மாளிகாவத்தை, மருதானை, பொரளை, தெமட்டகொடை மற்றும் பஞ்சிகாவத்தை போன்ற முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் கேட்க முடிந்துள்ளது.

கொழும்பு மத்திய தொகுதி முஸ்லிம்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் ஒரு உள்ளூராட்சித் தேர்தலுக்காக பேரம்பேசப்படுமளவுக்கு நலிவடைந்துள்ளது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இவரது பதவி துறத்தலுக்குப் பின்னாலுள்ள பின்னணிகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கொழும்பு மத்திய தொகுதி முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

82,000 விருப்பு வாக்குகளால் தெரிவான முஜிபுர் ரஹ்மான், எதிர்காலத்தில் தெற்கு முஸ்லிம்களின் தலைமைக்கான அடையாளமாக வளர்ந்து வந்தார். ஜாபிர் ஏ காதர், ஹலீம் இஷாக் மற்றும் எம்.எச்.முஹம்மத் போன்ற தெற்கு முஸ்லிம்களின் முன்னோடித் தலைவர்களின் இடத்துக்கு வளர்த்தெடுக்கும் விருப்புடனே முஜீபுர் ரஹ்மானுக்கு வாக்களித்ததாக தெரிவித்த பலர், தங்களைக் கேளாமல் அவர் பதவி துறந்திருக்ககக் கூடாதென்றும் தெரிவித்துள்ளனர். தெற்கில் ஒரு முஸ்லிம் அடையாளம் வளர்வதை அல்லது தென்படுவதை சஜித் பிரேமதாஸ விரும்பவில்லையா? என்றும் இவர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதலையடுத்து கொழும்பு மாவட்ட முஸ்லிம்களே அதிக நெருக்குவாரங்களுக்கு உள்ளாகினர். அன்று நிலவிய அரச ஒடுக்குமுறைக்கு எதிராக முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய எதிர்ப்புக் குரல்கள்தான் அவரை இந்தளவு எழுப்பிவிட்டது. இந்நிலையில், தேசிய அரசியலிலிருந்து அவரை மலினப்படுத்த எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் பதவி விலகலுக்கு, சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி என்ன பரிசு தரப்போகிறது என்பதையே கொழும்பு முஸ்லிம்கள் எதிர்பார்த்துள்ளனர்.


ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கில் உதயமான காலப்பகுதியிலும் தெற்கு முஸ்லிம்கள் சிலரின் சீண்டல்கள், சந்தேகங்களுக்கு உள்ளாக நேர்ந்தது. இந்த நேரத்தில், அன்றிருந்த தெற்கு தலைவர்களான எம்.எச்.முஹம்மத், ஏ.எச்.எம்.அஸ்வர் மற்றும் அமைச்சராக இருந்த ஏ.எச்.எம். பொளஸி ஆகியோரே தனித்துவ அரசியலுக்கும் தென்னிலங்கை முஸ்லிம்களுக்கும் சம்மந்தமில்லை என்பதை தெளிவுபடுத்தியிருந்தனர்.

எனவே, இதுபோன்ற இன்னல்கள், நெருக்கடிகளுக்கு முன்வந்து, தெற்கு முஸ்லிம்களுக்கு வழிகாட்ட முஜிபுர் ரஹ்மான் தேசிய அரசியலில் மீண்டும் நுழைய வேண்டும். தேசியப் பட்டியிலிருந்தாவது இவருக்கு ஒரு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் கொழும்பு முஸ்லிம்கள் விரும்புகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ தெற்கு முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை மாத்திரமல்ல, கிழக்கிலிருந்த கட்சியின் முஸ்லிம் பிரதிநிதித்துவங்களைப் பாதுகாத்த வரலாற்றை அவரது மகன் புரிந்துகொள்வது அவசியமென தென்னிலங்கை புத்திஜீவிகள் கருதுகின்றனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ/டன் 1989 இல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இதன் பிரகாரம், சம்மாந்துறையில் எம்.ஏ.மஜீத் மற்றும் கல்முனை ஏ.ஆர்.எம்.மன்சூர் ஆகியோர் போட்டியிடுவதிலிருந்து தவிர்க்கப்பட்டனர். இருந்தாலும், இவ்விருவரையும் தேசியப் பட்டியலூடாக பாராளுமன்றம் நுழையவைத்த தனது தந்தையின் கைங்கர்யத்தை அவரது மகன் சஜித் பிரேமதாஸ முன்னுதாரணமாகக்கொள்ள வேண்டும் என்றும் தென்னிலங்கை புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# IIC Kuwait - குவைத் வாழ் இலங்கையர்கள் குவைத்தில் ஏற்பாடு செய்த இரத்த தான நிகழ்வு










(ஹரீஸ் சாலிஹ்)

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக குவைத் வாழ் இலங்கையர்களுக்கு பல வகையான சேவைகளையும் செய்து வரும் இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் (IIC Kuwait) பதினொராவது வருடாந்த இரத்த தான நிகழ்வு “என்னை ஆளாக்கிய நாட்டுக்கு இரத்த தானம் செய்வோம்” எனும் சுலோகத்தின் கீழ் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குவைத், ஜப்ரியா மத்திய இரத்த வங்கியில் மிகவும் சிறப்பாக நடந்து முடிந்தது. இந்நிகழ்வை இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் பெண்கள் பிரிவு ஏற்பாடு செய்திருந்தது. இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் தலைவர் அஷ் ஷேய்க் ஷிராஸ் அஸீஸ் அவர்கள் இந்நிகழ்வை தலைமை தாங்கினார்கள்.

இந்த இரத்த தான நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித் அவர்களும், விஷேட அதிதியாக Muslim AID நிறுவனத்தின் இலங்கைக்கான மேலாளர் பைஸர் கான் அவர்களும் கலந்து சிறப்பித்ததுடன், குவைத் நாட்டில் பணி புரியும் இலங்கை வைத்தியர்கள் குழு, குவைத்தில் இயங்கும் இலங்கை, இந்திய சங்கங்களின் பிரதிநிதிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர். அதேபோல் நூற்றுக்கும் அதிகமானோர் ஜாதி, இன, மத பேதமின்றி இரத்த தானம் செய்தனர்.

இந்த இரத்த தான நிகழ்வு குவைத் வாழ் இலங்கையர்கள் குவைத் நாட்டுக்கு செய்யும் நன்றிக் கடனாகவும், எங்கள் தாய்நாட்டுக்கு செய்யும் ஒரு கௌரவமாகவும் இருந்தது. இவ்வாறான மனித நேயப் பணிகள் நாடுகளுக்கிடையேயும், இனங்களுக்கிடையேயும் நல்லுறவை ஏற்படுத்தி சக வாழ்வை கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

உலக இரத்த தான தினம் ஆண்டுதோறும் ஜூன் மாதம் 14ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புடன் உலக சுகாதார நிறுவனத்தால் சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது. குவைத் மத்திய இரத்த வங்கி ஆண்டு தோறும் அதிக இரத்த தானம் செய்த சமூகங்களையும், அமைப்புக்களையும், தனி மனிதர்களையும் இத்தினத்தில் கௌரவிக்கின்றது. அந்த வகையில் 2020-2021 ஆண்டில் அதிக இரத்த தானம் செய்த இலங்கை அமைப்புக்களில் ஒன்றாக இக்ரஃ இஸ்லாமிய சங்கம் (IIC Kuwait) கௌரவிக்கப்பட்டது. குவைத் மத்திய இரத்த வங்கியால் இலங்கையர்கள் இவ்வாறு கௌரவப்படுத்தப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

# மனநிலை பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுக்கும் நிலையம் திறந்து வைப்பு!




(அபு அலா)

18 வயதுக்குட்பட்ட பால்நிலையின்மையால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் இல்லத்து வன்முறையினால் மன உளைச்சலுக்கு உள்வாங்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் கூடிக்கொண்டே செல்கிறது. அதிலிருந்து அவர்களை விடுபட வைப்பதற்கான பல முயற்சினை நாம் முன்னெடுத்து வருகின்றோம் என்று திருமலை மாவட்ட பெண்கள் அமைப்பின் பணிப்பாளர் திருமதி பிரசாந்தினி உதயகுமார் தெரிவித்தார்.

உளவளம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாவட்ட உளவள நிலையம் திறந்து வைக்கும் நிகழ்வு செவ்வாயன்று (21) துளசிபுர நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்து வைத்தார். இதில் கலந்துகொண்ட அவர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய காலகட்டத்தில் குற்றமிழைத்தவர் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கிடையிலான அதிகார வேறுபாடே பால்நிலை சார் வன்முறைக்கான அடிப்படைக் காரணமாகும். இதுதவிர சமுக, மத, பண்பாட்டுக் காரணிகள், தனிப்பட்ட பழக்கங்கள் மற்றும் நடத்தைகள், பொருளாதாரக் காரணிகள், பலவீனத்தன்மை உள்ளிட்ட சூழ்நிலை சார் காரணிகளாலும் இந்நிலை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இந்நிலைமையிலிருந்து அவர்களை பாதுகாப்பான முறையில் மீட்டெடுக்கும் நேக்கிலேயே இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இதில் பாதிக்கப்பட்ட பெண்களை துரிதமா அவர்களின் துயரிலிருந்து இலகு வழியில் வெளியே கொண்டு வருவதற்காக திருகோணமலை மாவட்ட 7 பிரதேச செயலகப் பிரிவின் கீழ் கடமையாற்றும் இதுதொடர்பான உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களும் ஒருமித்த பங்குதாரர்களாக பணியாற்றும்போதே, சிறந்த மாற்றத்தை உருவாக்குவதுடன், ஏனையவர்களைப் போன்று பாதிக்கப்பட்டவர்களையும் வாழவைக்க முடியும் என்றார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆணையாளர் திருமதி றிஸ்வாணி றிபாஸ், உளநல வைத்திய நிபுணர் வைத்தியர் திருமதி ஹயானி ஜெயவர்த்தன, மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் பொறுப்பு வைத்தியர், திருமலை மாவட்ட பெண்கள் அமைப்பின் உத்தியோகத்தர்கள், திருகோணமலை மாவட்ட 7 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.



சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் நிலையத்திற்குட்பட்ட பனிச்சங்கேனி கண்டத்தில் 16 வாரமாக நடைபெற்ற நெற் பயிர் செய்கை மேற்க்கொள்ளும் விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பயிற்சி நெறியின் இறுதி நிகழ்வும், அறுவடை மதிப்பீட்டு விழாவும் (23) நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

(எம்.என்.எம்.அப்ராஸ்)

# ஜப்பான் தூதுவர் திருகோணமலை விஜயம்- கிழக்கு ஆளுநரும் பங்கேற்பு



(அப்துல்சலாம் யாசீம்)

விவசாயத்திற்கு இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டால் 2050 ஆம் ஆண்டளவில் எமது மண் முற்றாக அழிந்துவிடும். அப்படி நடந்தால் மண்ணை மீட்க முடியாது என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தெரிவித்தார்.

ஜப்பானில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமான ”பீஸ் வின்” மூலம் திருகோணமலை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இயற்கை உற்பத்தி களுக்கான விழிப்புணர்வும் விவசாய உணவு உற்பத்திச் சந்தையும் என்ற தலைப்பிலான அறிமுக கண்காட்சியை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் திரு.மிசுகோஷி ஹிடேகியும் கலந்துகொண்டார்.

இதில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் கிழக்கு மாகாண ஆளுநர் இவ்வாறு உரையாற்றினார்.

“எங்கள் மண்ணைப் பாதுகாப்பதை ஒருபோதும் தள்ளிப் போடக் கூடாது. இன்று முதல் நாம் அதனை பின் பற்ற வேண்டும்.எமது நாட்டில் 02 ஏக்கர் நெற்செய்கையை மேற்கொள்ளும் பெருமளவிலான விவசாயிகள் உள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமன்றி கிழக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள விவசாயிகள் இவ்வாறான விடயங்களுக்குப் பழகிக் கொள்ள வேண்டும். விஷமில்லா உணவுக்காக ஜப்பானில் மிக முக்கியமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய பொருட்களுக்கு நல்ல தேவை உள்ளது.

எனவே, இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கியதற்காக ஜப்பான் தூதருக்கு நான் குறிப்பாக நன்றியுள்ளவனாக இருக்கிறேன்” என்று ஆளுநர் கூறினார்.

இந்த வைபவத்தின் பின்னர் ஜப்பானிய தூதுவருக்கும் ஆளுநருக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் விவசாயம், தொல்லியல் மற்றும் சுற்றுலா துறைகளுக்கு ஜப்பானில் இருந்து புதிய முதலீட்டாளர்களை வரவழைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென ஆளுநர் அங்கு கோரிக்கை விடுத்தார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கனிய மணல் கூட்டுத்தாபனத்தில் ஜப்பான் அரசாங்கத்தின் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக. தூதரிடம் ஆளுநர் வலியுறுத்தினார்.




# அடுத்தவரின் மொழியை அறிந்திருப்பது ஆக்கபூர்வ செயற்பாட்டிற்கான விதை!



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மொழிக்கு இனமத, பேதமில்லை. ஆயினும், எமது நாடு மொழியை அடிப்படையாகக் கொண்டு இன்னமும் பிளவுபட்டுத்தான் நிற்கிறது.

"அடுத்தவரின் மொழி உங்களுக்குத் தெரிந்தால் ஆயிரம் அவசியமான புத்தி எமக்குக் கிட்ட வேண்டும்.

இலங்கையில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சிறுபான்மையினர் தங்களது குரலை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்ல ஆங்கிலக் கல்வி அவசியம் என்று வலியுறுத்துகிறார் ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம் மற்றும் கென்ற் ஆங்கிலக் கல்வி நிலையம் ஆகியவைகளின் பணிப்பாளரான அனீஸா பிர்தௌஸ்.

கென்ற் ஆங்கிலக் கல்வி நிலையத்தின் கல்விச் செயற்பாடுகளில் சிறந்த அடைவைப் பெற்ற 273 மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி வைக்கும் 13வது வருடாந்த நிகழ்வு காத்தான்குடி மத்திய நமது பிரச்சினைகளைக் கொண்டு செல்வதற்கு சர்வதே மொழியான ஆங்கிலத்தினூ டான தொடர்பாடல் அறிவு இல்லாதிருப்பது ஒரு தடையாக இருந்து கொண்டிருக்கின்றது.

ஆகவே ஆங்கிலத்தில் கற்று புலமை பெற்று நாம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற வேண்டும். ஆங்கில மொழி ஒருவருடைய ஆளுமையை உருவாக்கும் என்பதில் ஐயப்பாடு இல்லை. எனவே தற்போதைய நாட்டு பொருளாதார வீழ்ச்சி மற்றுமுள்ள நெருக்கடி நிலைமைகளுக்கு தக்க தருணத்தில் கைகொடுக்கக் கூடியது ஆங்கிலக் கல்வியோகும்" என்றார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.

"அம்மா" என்பது நாம் கேள்விப்பட்ட மிக இனிமையான சொல்.

எனவே மொழி தாயைப்போலவே மிகவும் நெருக்கமானது,




வழியாக கூறப்படும் விடயமே தவிர மொழி தொடர்பாக எதுவித செயற்பாடுகளோ, நடைமுறைகளோ கவனத்தில் எடுத்தாளப்படவில்லை. எதுவும் நடைமுறையில் இல்லை.

நம் நாட்டில் வாழும் இரு மொழி இனத்தவர்களுக்கும் தம்முடன் ஒட்டிப்பிறந்த பிறந்த தாய் மொழியைத் தவிர ஏனைய மொழியில் சரளமாக உரையாட முடிவதில்லை.

இதனால் நமது தேச மக்கள் மொழி தொடர்பான பிரச்சினைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

மொழியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட




நட்புறவுகள் உங்களருகில் அமைந்து விட்டது என்று அர்த்தம்" இந்த வார்த்தையை காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதி ரணசிங்ஹ பிறேமதாஸ அவர்கள் சிலாகித்தப் பேசுவது வழக்கம்.

"மொழி அடுத்தவரோடு அன்பை வளர்க்கும் கருவி" என்றும் அவர் கூறுவார்.

"மொழிக்கு உரித்தான கௌரவத்தை வழங்காத மனப்பான்மை காரணமாகவே நாம் கடந்த முப்பது ஆண்டுகாலம் துன்பியல் போரை எதிர்நோக்கினோம்..

பிரச்சினைக்கான தீர்வு வெடி மருந்துகளிடமும் ஆயுதங்களிடமும் கையளிக்கப்பட்டதன் மூலம் எமது நாட்டிற்கே உரித்தான அனைத்து மனித, பௌதீக, அறிவுசார் வளங்களை அசாதாரணமான முறையில் அழித்துக் கொண்டோம்.

இவை அனைத்தையும் விட எமது மனிதத்துவத்தையும், மனித நேயத்தையும் நாம் தொலைத்தும் விட்டோம்.

யுத்தம் முடிவடைந்து விட்டது. ஆனால், யுத்தம் ஏற்பட்டதற்கான மூல காரணங்கள் முடிவுறுத்தப்படவில்லை. எனவே, இப்போதாவது மேற்படி காரணிகளை இல்லாதொழிப்பதற்கு கல்லூரியில் கடந்த 19.02.2023 அன்று இடம்பெற்றபோது இலங்கையர்களுக்கு ஆங்கிலக் கல்வியின் அவசியம் குறித்து அவர் சிலாகித்துப் பேசினார்.

அங்கு மேலும் உரையாற்றிய பணிப்பாளர் அனீஸா, ஆங்கிலத்தைக் கற்பது வெறுமனே ஒரு பாடத்தைக் கற்பது போன்றாகாது. அது உங்களுக்கான ஒரு சர்வதேச தகைமைப் பத்திரமாக இருக்கும். இப்பொழுது நமது நாட்டின் பொருளாதார மற்றும் ஸ்திரமற்ற நிலைமை காரணமாக நாட்டிலிருந்து அநேகமானோர் வெளியேறி வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்லும் நிலைமையைப் பார்க்கிறோம்.

அதேவேளை சிறுபான்மையினராகிய நாங்கள் பல்வேறு வகையான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டும் இருக்கின்றோம்.

இந்நிலைமையில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் எங்களது குரல்களை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்தி எங்களது உரிமைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையிலும் நாங்கள் இருக்கின்றோம்.

சர்வதேச மட்டத்திற்கு எம்.எம். அமீர், காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி எம்.எம். கலாவுதீன், மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் முன்னாள் தலைவர் எம்.ஐ.எம். நவாஸ் உட்பட்ட கல்வியியலாளர்கள், ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினர். மேலும் மாணவர்களின் கலை நாடக வெளிப்படுத்தல்கள் ஊடாக ஆங்கிலக் கல்வியின் அவசியம் உணர்த்தப்பட்டது.

முக்கியமாக சர்வதேச தொடர்பாடலுக்கான ஆங்கில அறிவைப் பெற்றிருப்பதன் மூலம் நாட்டின் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்திக்கான உத்திகளையும் வகுத்துக் கொள்ளலாம்

மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு வாழ மொழியறிவு நமக்கு பல வழிகளில் உதவும். அடுத்தவரின் மொழியை நாம் அறிந்திருப்பது விலை மதிக்க முடியாத சொத்தாகும்.

மொழியும் மனித நேயமும் ஒருவருக்கு எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது, மொழிப் பாகுபாட்டினால் எவ்வாறான குழப்பங்களை எதிர் கொள்கின்றோம், என்பது பற்றி நாம் கரிசனை கொள்ள வேண்டும். முக்கியமானது.

மொழியை கௌரவிப்பதன் மூலம் அவர் கௌரவிக்கப்படுகின்றார். ஒருவரின் மொழியை மற்றவர் தாழ்த்துவதால் அவர் தாழ்த்தப்படுகின்றார். அனைத்தையும் எமக்கு மொழியே கற்றுத் தருகின்றது.

எமது மனிதத்துவத்தை நாம் மொழியின் மூலமே வெளிப்படுத்துகின்றோம். எமது மனிதத்துவத்தின் பொதுத் தன்மையைப் பேண, மற்றையவரின் மொழியை நாம் கௌரவிக்க வேண்டும். அப்போதுதான் மனித மாண்பைப் பிரகடனப்படுத்த முடியும்.

வேற்று மொழியைப் பேசுவதன் மூலமும் பயன்படுத்துவதன் மூலமும் தனிநபர் என்ற வகையில் பெற்ற உரிமை காரணமாகவே கௌரவத்திற்குப் பாத்திரமாகின்றோம்.

இந்த உரிமை மூலம் பெறும் மகிழ்ச்சி மற்றையவரின் உரிமையாகும். இத்தகையதொரு சூழலிலேயே சமாதானத்தையும் சுபீட்சத்தையும் அனைவரும் பெறமுடியும்.

எமது நாடு ஒரே நாடு, நாம் ஒரு தாய் மக்கள், ஒரே குடையின் கீழ் வாழவேண்டும்" என்பது வாய் பாகுபாடு காட்டல் காரணமாக நாம் கடந்த 30 ஆண்டுகள் யுத்தத்தை எதிர்கொண்டோம். யுத்தம் இன்று நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் எந்தத் தரப்பும் வெற்றி கொள்ளவில்லை. மொழிகளை கௌரவிப்பதால் மாத்திரமே இரு தரப்பினரும் வெற்றி பெற முடியும். இதனூடாகத்தான் நிரந்தர சமாதானத்தையும், சுபீட்சத்தையும் அனைவரும் பெற முடியும்.

சிங்களமும், தமிழும் அரச கரும மொழிகளாயிருத்தல் வேண்டுமென்ற சட்டம் 1944.05.04ம் திகதி அரச சட்டசபையில் அங்கீகரிக்கப்பட்டது.


1948ம் ஆண்டு நமக்கு ஓரளவு சுதந்திரம் கிடைத்தது. அப்போது நமது நாட்டின் அரச கரும மொழி ஆங்கிலமாகத் திகழ்ந்தது. சுதந்திரத்தின் பின்னர் ஆங்கிலத்திலிருந்து விடுபட்டு இலங்கையின் அரச கரும மொழிகளாக சிங்களமும், தமிழும் அமுலாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை.

# தேர்தல் ஆணையத்திற்கு பணம் அனுப்பிய யாழ். இளைஞர்

யாழ். சுண்டுக்கிழியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் தேர்தல் ஆணையத்திற்கு பணத்தினை அனுப்பியுள்ளார்.

அனைவரும் ஒத்துழைப்பு செய்வோம், தேர்தலை நடாத்த ஒத்துழைப்போம், சிறு துளி பெருவெள்ளம் ஆகட்டும், தேர்தலை நடாத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம் என கோரி அவர் இவ்வாறு பணத்தினை அனுப்பியுள்ளார்.

தேர்தல் ஆணையகத்திற்கு தேர்தலை நடாத்துவதற்கு பணம் வழங்காத காரணத்தினால் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியில் வசிக்கும் இளைஞன் ஒருவர் காசுக்கட்டளை மூலம் 500 ரூபாய் பணத்தினை இவ்வாறு அனுப்பியுள்ளார்.



## யானையின் தாக்குதலில் பலியாகும் உயிர்கள் :

# மனித உயிர்களை பாதுகாப்பது தொடர்பில் அரசாங்க அதிகாரிகள்உயர்மட்ட கலந்துரையாடல்

(நூருள் ஹுதா உமர் )

சம்மாந்துறை பிரதேசத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் இன்று அதிகாலை யானை தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றமை அறிந்த சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.எம்.எம். தௌபீக் அவர்களை தொலைபேசியின் ஊடாக தொடர்பு கொண்டு பிரதேசத்தில் யனைகளினால் பலர் மரணம் அடைந்துள்ளதுடன், பொதுமக்களின் உடமைகளையும் நாளாந்தம் சேதப்படுத்துவதையும், தெளிவுபடுத்தினார்.

சம்மாந்துறை பிரதேசத்தில் யானைகளினால் ஏற்படும் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர



கலந்துரையாடல் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வெள்ளியன்று (24) இடம்பெற்றது.

இதில் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் பிரசாந்த, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் எம்.சீ.எம்.றியாஸ், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களான ஜெகதீஸ், சுரேஸ்குமார், சிசிரகாமினி, கித்சிறி மெமன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் சேதம் ஏற்படுத்தும் குறித்த ஒரு யானையை இனங்கண்டுள்ளதாகவும் அதனை வனவிலங்கு சரணாலயத்திற்கு இன்று ஏற்றி செல்லுவதற்கான நடைவடிக்கை எடுப்பதாகவும், விவசாய நடவடிக்கை முடியும் வரை யானைகளை வனவிலங்கு பாதுகாப்பு செயலணியும், சிவில் பாதுகாப்பு படையும் இணைந்து விவசாயிகளின் பாதுகாப்பை வயல் நிலப் பகுதிகளில் உறுதிப்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. அதனுடன் நீண்டகால பாதுகாப்பு திட்டதினையும் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# கொழும்பு அல் மஸ்ஜிதுந் நஜ்மியில் புனித மி:ராஜ் தின நிகழ்வு







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புனித மிஃராஜ் தின நிகழ்வு (18) நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கொழும்பு - 12, கெஸல்வத்தை அல் மஸ்ஜிதுந் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசலில் இரவு 8 மணி முதல் இடம்பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கொழும்பு -12, கெஸல்வத்தை அல் மஸ்ஜிதுந் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசலுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில், அல் மஸ்ஜிதுந் நஜ்மி ஜு/ம்ஆப் பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி எம்.எஸ். எம்.நூருல்லா மிஹ்ராஜ் இரவின் முக்கியத்துவத்தைப்பற்றி உரை நிகழ்த்தினார்.

இஹ்ஸானிய்யா அரபிக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எப்.எம். பருத் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறப்பு பிரார்த்தனைகளை (துஆ) நடாத்தினார்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுக்கு முஸ்லிம் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், அலா அஹமட் உட்பட திணைக்கள அதிகாரிகள், லிபிய தூதரக உயர் அதிகாரி முஸ்தபா இப்றாஹீம், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உதவிச் செயலாளர் மௌலவி எம்.எஸ்.எம். தாஸிம், ஹஜ் குழுவின் தலைவரும் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளருமான இப்ராஹிம் அன்சார், கதீப்மார் சம்மேளனத் தலைவர் மௌலவி அப்துல் ஜப்பார், கொழும்பு மாவட்ட மஸ்ஜித் சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி ஷிராஸ் நூர்தீன், தேசிய ஒருமைப்பாட்டிற்கான சர்வமதக் கூட்டணியின் இணைத் தலைவர் அல் ஹாபில் அஷ் ஸெயிட் கலாநிதி. ஹசன் மௌலானா, சூபி தரீக்காக்களின் தலைவர் நகீப் மௌலானா, கெஸல்வத்தை பொலிஸ் பொறுப்பதிகாரி சுஜித் பிரியந்த, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம்.முப்தி, அந் மஸ்ஜிதுந் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் எச். அம்ஜதீன், இணைச் செயலாளர்கள் ஏ.எம். கரீம் மற்றும் இர்ஷாத் ஹுசைன், பொருளாளர் எம்.என்.எம். நஜிப்தீன் கொழும்பு தெற்கு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உலமாக்கள், அரச உயர் அதிகாரிகள், கொழும்பு பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் குழு

உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் ஜமாஅத்தார்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் விசேட அம்சமாக கொழும்பு -12, கெஸல்வத்தை அல் மஸ்ஜிதுந் நஜ்மி ஜு/ம்ஆப் பள்ளிவாசலின் நூற்றாண்டை முன்னிட்டு, பள்ளிவாசலுக்கு டயஸ் செயார் நிறுவனத்தின் பணிப்பாளர் ஹனீபா ஹாஜியார் சோலார் பவர் சிஸ்டமொன்றைக் கையளிப்தற்கான ஆவணங்கள் இதன்போது கையளிக்கப்பட்டது.

# அஸ்பெக் அகடமியின் கௌரவிப்பு நிகழ்வு



(அஸ்ஹர் இப்ராஹிம்)

கல்குடா அஸ்பெக் அகடமியின் ஏற்பாட்டில் "தேசியம் வியக்கும் ஆரோக்கியத்துடனான எழுச்சி" கௌரவிப்பு அண்மையில் இடம்பெற்றது.

ஹோமாகம விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற 4வது இளையோர் தேசிய மட்ட பந்து பேட்மிண்டன் சுற்றுப்போட்டியில் தேசிய சம்பியன்களாக மகுடம் சூடிக்கொண்ட கல்குடா அஸ்பெக் அகாடமி வீரர்களைக் கௌரவிக்குமுகமாக இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் மீராவோடை அஸ்பெக் அகடமி முன்றலிலிருந்து சைக்கிள் பவனியுடனான ஊர்வலம் ஆரம்பமாகி வாழைச்சேனை பொது மைதானத்தை வந்தடைந்தது.

கல்குடா அஸ்பெக் அகடமியின் பணிப்பாளர் ஏ.எல்.எம்.இர்பான் தலைமையில் மிக விமர்சையாக இடம்பெற்ற இந்நிகழ்வில், வாழைச்சேனை பொலிஸ் நிலைய அதிகாரிகள், மீராவோடை ஜு/ம்ஆப் பள்ளிவாயல் நிர்வாகத்தினர், கல்குடா அஸ்பெக் அகடமி நிர்வாகத்தினர், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், 20வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் கலந்து கொண்ட ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்களான எம்.எச்.எம்.. அக்தாஸ், எச்.எம்.அப்னான், எப்.எம். பைசான், எம்.ஆர்.எம்..சனப், யூ.எம். சாஜித், வாழைச்சேனை அந்நூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்களான எம்.பி.எம்..நஜாத், ஏ.பீ.எம்.ஸஹீர், எம்.எப்.அல்அமீன், ஜே.எம்.ஆசிம், எம்.என்.எம் நதீர், எச்.எம்.ஏ ரிபாத், மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மாணவர்களான யூ.எம்.. ஆசாத், எஸ்.ஏ.ரஹ்மான், ஏ.எல். எம்..நஸீம் மற்றும் பேருவளை ஜாமிய்யா நளீமியா மாணவன் எம். எம்..மக்காரிம் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.












இந்தோனிசியாவிலிருந்து அம்மான் எக்ஸஸ்சைஸ் கடற்படை கப்பல் 138 பேர் கொண்ட அணி அண்மையில் கொழும்புத் துறைமுகத்தினை வந்தடைந்தது.

இந் நிகழ்வில் இலங்கைக்கான இந்தோனிசியாத் துாதுவர் தேவி டொப்பிங் இப் படையின் அதிகாரிகளை துறைமுகத்திலிருந்து வரவேற்றார் அத்துடன் இலங்கையில் உள்ள மகளிர் கடற்படை அதிகாரிகளும் இணைந்து கொழும்பில் உள்ள இந்தோனிசியத் துாதகரத்தின் அலுவலகக் கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடலும் இடம் பெற்றது. இந் நிகழ்வின்போது இலங்கை மகளிர் கடற்படை அணியினரும், இந்தோனிசியா கடற்படை அணியிரும் தங்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

இந்தோனிசியா கடற்படைக் கப்பலில் 14 பெண் கெலிக்கெப்டர் விமானிகளும் கெலி விமானம் ஒன்றையும் எடுத்துவந்திருந்தனர். அதன் அனுபவங்களைக் இலங்கையின் கடற்படை மகளிர் அனியுடன் பகிர்ந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

(அஷ்ரப் ஏ சமத்)



# எதிர்க்கட்சியின் சதிகளால் கவிழுமா அர்துகானின் அரசு!



அப்ரா அன்சார்

துருக்கியில் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து வீடற்றவர்களுக்கு பாதுகாப்பான வீடுகளை வழங்க அதிகாரிகள் விரைந்துள்ள நிலையில், பாதுகாப்புத் தரங்களை மீறியதாக சந்தேகிக்கப்படும் கட்டிட ஒப்பந்ததாரர்கள் மீதான விசாரணையை துருக்கி விரிவுபடுத்தியுள்ளது.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட 10 மாகாணங்களில் தரைமட்டமான ஆயிரக்கணக்கான கட்டிடங்களில் சில இடிந்து விழுந்ததில் அவர்களின் பங்கிற்காக 564 சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர், 160 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் மேலும் பலர் இன்னும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக துருக்கி உள்துறை அமைச்சர் சுலைமான் சோய்லு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரெசெப் தையிப் அர்துகானின் அரசாங்கம் கட்டிட விதிமுறைகளை அமுல்படுத்தவில்லை என்றும், 1999 ஆம் ஆண்டு கடைசியாக ஏற்பட்ட பெரிய பூகம்பத்திற்குப் பிறகு, நிலநடுக்கங்களை எதிர்க்கும் கட்டிடங்களை உருவாக்குவதற்காக விதிக்கப்பட்ட சிறப்பு வரிகளை தவறவிட்டதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

துருக்கி-சிரியா எல்லைப் பகுதியில் பேரழிவை ஏற்படுத்திய நிலநடுக்கங்களால் இறந்தவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 50,000 ஆக உயர்ந்துள்ளது, 8,000 க்கும் மேற்பட்ட நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன. துருக்கியில் 43,556 பேர் உயிரிழந்துள்ளதாக சோய்லு கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைப்படி நிலநடுக்கங்களால் 1.5 மில்லியன் மக்கள் வீடற்றவர்களாக மாறியுள்ளனர். சுமார் 500,000 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன, மேலும் 210 மில்லியன் டன் இடிபாடுகள் அகற்றப்பட வேண்டும், இது 30 சதுர கிமீ (11.6 சதுர மைல்) பரப்பளவை நிரப்பும்.

கூடாரங்களில் இருந்து கொள்கலன் நகரங்களுக்கு மக்களை மாற்றுவதற்கான நடவடிக்கையை துருக்கி கடந்த வியாழக்கிழமை தொடங்கியது. முதல் கட்டமாக 15,000 கன்டெய்னர்களில் மக்களை கொண்டு செல்ல வேண்டும்.இன்னும் சில மாதங்களுக்குள் தேர்தலை எதிர்கொள்ளும் அர்துகான், ஒரு வருடத்திற்குள் வீடுகளை மீண்டும் கட்டுவதாக உறுதியளித்துள்ளார்.

இந்த வாரம் சுமார் 865,000 பேர் கூடாரங்களிலும், 23,500 பேர் கொள்கலன் வீடுகளிலும் வசித்து வருவதாகவும், 376,000 பேர் பூகம்ப மண்டலத்திற்கு வெளியே மாணவர்கள் தங்கும் விடுதிகளிலும் பொது விருந்தினர் இல்லங்களிலும் இருப்பதாகவும் கூறினார்.

### இஸ்தான்புல்லில் அதிக பதட்டம்

துருக்கியின் அதிக மக்கள்தொகை கொண்ட நகரமான இஸ்தான்புல்லில் அடுத்த பெரிய நிலநடுக்கம் ஏற்படும் என்ற அச்சம் எப்போதும் இருந்து வருகிறது. ஆனால் இப்போது குடியிருப்பாளர்களிடையே அதிக அவசர உணர்வு உள்ளது, அவர்கள் தங்கள் கட்டிடங்கள் வலிமையானவை மற்றும் அடித்தளங்கள் வலுவானவை என்று நிபுணர்கள் சான்றளிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கட்டிட ஆய்வாளர்கள், இடிக்கப்பட வேண்டிய அல்லது பழுதுபார்க்க வேண்டிய கட்டமைப்புகளை அடையாளம் காண விரிசல் அல்லது மோசமான அடித்தளங்களை ஸ்கேன் செய்து வருகின்றனர். இஸ்தான்புல்லில் ஒரு வலுவான நிலநடுக்கம் ஏற்பட்டால் 90,000 கட்டிடங்கள் இடிந்து விழும் என்று நகர அதிகாரிகள் சமீபத்தில் எச்சரித்தனர்.

இஸ்தான்புல்லில் நிலநடுக்கம் ஏற்பட்டால் 4.5 மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவார்கள்" என்று இஸ்தான்புல் நகராட்சியைச் சேர்ந்த பர்கா கோக்சே கூறினார். "இது எங்களுக்கு முன்னுரிமை மற்றும் தேசிய பாதுகாப்பு விஷயமாக பார்க்கப்பட வேண்டும்."என்றார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தனது வீட்டை வாங்கிய லெவன்ட் அக்டாஸ்,

இஸ்தான்புல்லில் இனி பாதுகாப்பாக உணராதவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்றார்.

“நான் இஸ்தான்புல்லில் நீண்ட காலம் தங்கத் திட்டமிடவில்லை. இறுதியில், நான் வேறு இடத்திற்கு செல்ல வேண்டும். எனது குடும்பத்தை பாதுகாப்பான நகரத்திற்கு அழைத்துச் செல்வது பற்றி யோசித்து வருகிறேன், "என்று அக்தாஸ் கூறினார்.

துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம், இந்த தசாப்தத்தில் மிக மோசமான ஒன்றாக இருக்கும் என்று நிலநடுக்க வல்லுநர்கள் தெரிவித்தனர். அனடோலியன் மற்றும் அரேபிய தட்டுகளுக்கு இடையில் 100 கிமீ (62 மைல்) விரிசல் ஏற்பட்டதாலே ஆகும்.

### நிலநடுக்கம் எங்கிருந்து உருவானது?

இந்த நிலநடுக்கம் துருக்கியின் நூர்டாகி நகருக்கு கிழக்கே 26 கி.மீ தொலைவில் கிழக்கு அனடோலியன் ஃபால்டில் 18 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கம் வடகிழக்கு திசையில் பரவி, மத்திய துருக்கி மற்றும் சிரியாவில் பேரழிவை ஏற்படுத்தியது.20 ஆம் நூற்றாண்டின் போது, கிழக்கு அனடோலியன் ஃபால்ட் சிறிய பெரிய நில அதிர்வு நடவடிக்கைகளை அளித்தது. "சிஸ்மோமீட்டர்கள் மூலம் பதிவு செய்யப்பட்ட (பெரிய) பூகம்பங்களை நாம் வெறுமனே சென்றால், அது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வெறுமையாக இருக்கும்" என்று பிரிட்டிஷ் புவியியல் ஆய்வின் ஆராய்ச்சியாளர் ரோஜர் முசன் கூறினார்.

அமெரிக்க புவியியல் ஆய்வின் படி, 1970 முதல் மூன்று பூகம்பங்கள் மட்டுமே ரிக்டர் அளவுகோலில் 6.0 க்கு மேல் பதிவாகியுள்ளன. ஆனால் 1822 இல், 7.0 நிலநடுக்கம் இப்பகுதியில் தாக்கியது, மதிப்பிடப்பட்ட 20,000 மக்கள் கொல்லப்பட்டனர்.

### அது ஏன் மிகவும் கடுமையாக இருந்தது?

கிழக்கு அனடோலியன் தவறு என்பது ஸ்ட்ரைக்-ஸ்லிப் தவறு ஆகும்.

அவற்றில், திடமான பாறைத் தகடுகள் செங்குத்து பிழைக் கோட்டின் குறுக்கே ஒன்றுக்கொன்று எதிராகத் தள்ளப்பட்டு, ஒரு கிடைமட்ட இயக்கத்தில் இறுதியாக நழுவும் வரை மன அழுத்தத்தை உருவாக்கி, நிலநடுக்கத்தைத் தூண்டக்கூடிய மிகப்பெரிய அளவு திரிபுகளை வெளியிடுகிறது.

கலிபோர்னியாவில் உள்ள சான் ஆண்ட்ரியாஸ் ஃபால்ட் ஒருவேளை உலகின் மிகவும் பிரபலமான ஸ்ட்ரைக்-ஸ்லிப் ஃபால்ட் ஆகும், விஞ்ஞானிகள் ஒரு பேரழிவு நிலநடுக்கம் பற்றி நீண்ட காலத்திற்கு முன்பே எச்சரித்தனர்.

"ஆதாரத்தில் அதே அளவு ஆழமான நிலநடுக்கத்தை விட நிலத்தின் மேற்பரப்பில் ஏற்படும் நடுக்கம் மிகவும் கடுமையானதாக இருக்கும்" என்று பிரிட்டனில் உள்ள திறந்த பல்கலைக்கழகத்தின் கிரக புவியியலாளர் டேவிட் ரோத்தரி கூறினார்.

### என்ன மாதிரியான பின்னடைவுகளை எதிர்பார்க்கலாம்?

ஆரம்ப நிலநடுக்கத்திற்குப் பதினோரு நிமிடங்களுக்குப் பிறகு, இப்பகுதி 6.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தால் தாக்கப்பட்டது. சில மணிநேரங்களுக்குப் பிறகு 7.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது, அதைத் தொடர்ந்து பிற்பகல் 6.0 பிடிப்பு ஏற்பட்டது.

"நாம் இப்போது பார்ப்பது என்னவென்றால், செயல்பாடு அண்டை தவறுகளுக்கு பரவுகிறது" என்று முசன் கூறினார். "சிறிது காலத்திற்கு நில அதிர்வு தொடரும் என்று எதிர்பார்க்கிறோம்."

1822 ஆம் ஆண்டு நடந்த கொடிய நிகழ்வுக்குப் பிறகு, அடுத்த வருடத்தில் அதிர்வுகள் தொடர்ந்தன.

மக்கள் வசிக்கும் பகுதிகளில் இதேபோன்ற அளவிலான நிலநடுக்கங்கள் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றுள்ளன. நேபாளத்தில் 2015 இல் 7.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் கிட்டத்தட்ட 9,000 உயிர்களைக் கொன்றது.

“இது நன்றாக இருக்காது,” என்று முசன் கூறினார். "இது ஆயிரக்கணக்கில் இருக்கும், பல்லாயிரக்கணக்கில் இருக்கலாம்."

குளிர்ந்த குளிர்கால காலநிலை, இடிபாடுகளில் சிக்கியவர்கள் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்புகள் குறைவு என்று அவர் மேலும் கூறினார்.

### துருக்கியில் தேர்தல் நடக்குமா?

துருக்கியில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பூமியதிர்ச்சி அர்துகானின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு சவாலினை ஏற்படுத்தியுள்ளது. இந்த அனர்த்தத்துக்கு முன்பே ஜனாதிபதியின் செல்வாக்கு சரிவடைந்திருந்தன. துருக்கிப் பணம் பெறுமதியின் வீழ்ச்சி, உயர் பணவீக்கம் காரணமாக ஜனாதிபதி அர்துகானின் செல்வாக்கு வீழ்ச்சி கண்டிருந்தது.